**செய்தி வெளியீடு எண்: 630** **நாள் : 15. 12. 2014**

# <u>செய்தி வெளியீடு</u>

பாரம்பரியமிக்க கோ-ஆப்டெக்ஸ் கைத்தறி நிறுவனம், கைத்தறி நெசவாளர்களுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் 80 ஆண்டுகளுக்கு மேலாக சிறப்பான சேவையாற்றி வருகிறது.

**மின் வணிகம்**

உலகிலுள்ள பெரும்பாலான முன்னணி நிறுவனங்கள் முதல் சிறு நிறுவனங்கள் வரை தங்களது வணிக முறையை மின்வணிகமாக்கி வரும் முறை தற்போது மிகவும் பிரபலமடைந்துள்ளது. இதனால் வாடிக்கையாளர்களின் பொன்னான நேரம் விரயமாவது தவிர்க்கப்படுவதுடன் தங்கள் மனதிற்கு பிடித்த பொருட்களை இருக்கும் இடத்திலிருந்தே தேர்வு செய்து வாங்கி மகிழலாம். இத்தகைய மின்வணிக முறையினை கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் நடைமுறைப்படுத்துவதில் பெருமை கொள்கிறது. மின் வணிகம் மூலம் இந்திய அளவில் வாடிக்கையாளர்களோடு கோ–ஆப்டெக்ஸ் ஒரு நெருங்கிய வணிக உறவினை ஏற்படுத்திக் கொள்ள ஏதுவாக இருக்கும்.

கோ-ஆப்டெக்ஸ் துணி இரகங்களை கணினி மூலம் வலைதளத்தில் (www.cooptex.com) பார்வையிட்டு தேர்வு செய்து, அதற்குரிய தொகையினை செலுத்தி, தங்கள் இல்லத்திற்கே அவற்றை நேரிடையாக பெற்றுக் கொள்ள வழிவகை செய்யும் இந்த மின் வணிகத்தை (e-shopping) மாண்புமிகு புரட்சிதலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, சென்னை எழும்பூர் கோ–ஆப்டெக்ஸ் தலைமை அலுவலகக் கூட்ட அரங்கில் மாண்புமிகு தமிழக கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் **திருமதி. S.கோகுல இந்திரா அவர்கள்** 15.12.2014 இன்று தொடங்கி வைத்தார்கள். இந்த மின் வணிகத்தில் முதற் கட்டமாக பட்டு சேலைகள், பருத்தி சேலைகள் ஆகியவை விற்பனைக்கு அறிமுகப்படுத்தப்பட்டன.

**பரிசுக்கூப்பன்**

மேலும் வாடிக்கையாளர்களைக் கவரும் வகையில் வசதியை முன்னிட்டு, கோ-ஆப்டெக்ஸ் '**பரிசுக்கூப்பன்**' திட்டம் (Gift Voucher) ரூ 500/-, ரூ1000/-, ரூ2000./–, என்ற மதிப்புகளில் மாண்புமிகு கைத்தறி துறை அமைச்சர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது.

இப்பரிசுக் கூப்பனை, கோ-ஆப்டெக்ஸில் தேர்வு செய்யப்பட்டுள்ள 20 விற்பனை நிலையங்களில் ஏதேனும் ஒன்றில் தங்களுக்கு தேவையான கூப்பன் மதிப்பிற்கு பணம் செலுத்தி, கூப்பனை பெற்றுக்கொள்ளும் வாடிக்கையாளர், அவர் தம் உறவினர் அல்லது நண்பருக்கு பரிசாக வழங்கலாம். கூப்பன் பெற்ற நபர், கூப்பன் வழங்கப்பட்ட நாளிலிருந்து 90 நாட்களுக்குள்ளாக கூப்பனில் குறிப்பிட்டுள்ள 20 விற்பனை நிலையங்களில் ஏதேனும் ஒரு விற்பனை நிலையத்தில் நடைமுறையில் உள்ள தள்ளுபடி வசதியுடன், கோ-ஆப்டெக்ஸ் துணி இரகங்களைப் பெற்றுக்கொள்ளலாம். இதனால், பரிசுக்கூப்பனை பரிசாகப் பெறுபவர் மகிழ்ச்சியடைவதோடு, அவர் வாங்கும் இரகங்களை நெய்த எளிய நெசவாளர் குடும்பம் மேம்பாடு அடைய உதவிட்ட ஒரு மகத்தான திருப்தியும் அவருக்கு ஏற்படும்.

**புதிய இரகங்கள் அறிமுகம்**

எதிர்வரும் கிறிஸ்துமஸ், புத்தாண்டு மற்றும் பொங்கல் சிறப்பு விற்பனைக்காக மகளிர்க்கான "**ஜெயகார்த்திகா**" சேலைகளும், ஆண்களுக்கான 100 % பட்டுச் சட்டைகள் மற்றும் 100% பருத்திச் சட்டைகளும் மாண்புமிகு தமிழக கைத்தறி துறை அமைச்சர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டன.

இந்த சிறப்பு விழாவில் **கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறையின் அரசு முதன்மைச் செயலாளர் திரு.ஹர்மந்தர்சிங் இ.ஆ.ப., கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் தலைவர் திரு. கே.வி.மனோகரன், கோ–ஆப்டெக்ஸ் மேலாண்மை இயக்குநர்**

**திரு.தி.ந.வெங்கடேஷ்.இ.ஆ.ப., கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் துணைத் தலைவர் திருமதி.எஸ்.ஜெயந்தி சோமசுந்தரம்** மற்றும் **நிர்வாக குழு உறுப்பினர்கள்** ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**